RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2423

# பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் பெண்ணியம்

**கோ. பிரமுஅம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி-627412, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in Bhavender Bharathidasan's songs

**G. Pramu Ammal [a, *]**

[a] Department of Tamil, Sri Paramakalyani College, Alwarkurichi-627412, Tamil Nadu, India

* Corresponding Author: paramuamma@gmail.com

Received: 11-01-2024
Revised: 16-03-2024
Accepted: 28-03-2024
Published: 05-04-2024

Check for updates

**ABSTRACT**

Women are considered as the eyes of the society, not only for the home but also for the whole country. Nothing good happens in this world without women. That is why Poet Desika Vinayakam Pillai praised womanhood in his songs. But still women were marginalized in society; denied education, they were seen as inferior to men. There were many people who wrote their poems to raise the status of women during that period. Bharathidasan realised that only if femininity flourishes, virtue will flourish in the country, thus he gave voice to femininity in his songs. This article examines Bharathidasan's views on femininity.

**Keywords:** Bharathidasan, Feminisim, Songs, Society

## முன்னுரை

சமுதாயத்தில் வீட்டிற்கு மட்டுமல்லாமல் நாட்டிற்கும் கண்களாகத் திகழ்பவர்கள் பெண்கள். பெண்கள் இல்லாமல் இவ்வுலகில் எவ்வித நன்மையும் நடைபெறுவதில்லை. அதனால் தான், "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்மையைப் போற்றினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஆயினும் சமுதாயத்தில் பெண்கள் புறந்தள்ளப்பட்டனர்; கல்வி மறுக்கப்பட்டது ஆணுக்கு ஒருபடி கீழேயே வைத்துப் பார்க்கப்பட்டனர். அக்காலக்கட்டத்தில் பெண்மையின் நிலை உயர தன் கவிதைகளால் கருத்துக்களைப் பதிவிட்டவர்கள் பலராவர். பெண்மையறம் செழித்தால் மட்டுமே நாட்டில் அறம் செழிக்கும் என்பதையுணர்ந்து பாரதிதாசன் தனது பாடல்களில் பெண்மைக்காகக் குரல் கொடுத்தார். பாரதிதாசனின் பெண்மை குறித்த கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பெண் குழந்தைத் தாலாட்டு

பெண் பெருமைமிக்கவள். அன்பினுக்காகவே வாழ்ந்து வீட்டை இன்னகையால் ஒளிபெறச் செய்பவள்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள, கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்"[1]

என்ற பொய்யிற்புலவர் வள்ளுவர் கற்பென்னும் திண்மை வாய்ந்த பெண்ணினத்தைப் போற்றிப் புகழ்கின்றார். பாரதிதாசனும் பெண் குழந்தைத் தாலாட்டில்,

"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே!"2

என்று பெண்மையை உயர்த்திப் போற்றுகிறார். பெண்கள் உடலால் வேண்டுமானால் வலிமையற்றவர்களாக இருக்கலாம். ஆனால் உள்ளத்தால் வலிமை நிறைந்தவர்கள். அவர்களால் தான் உலகநலமே சிறக்கின்றது.

"நாய் என்று பெண்ணை நவில்வோர்க்கும் இப்புவிக்குத்

தாய்என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!"3

என்று பெண்ணை நாய் என்று இகழ்ந்தவர்களுக்கும், இப்புவிக்கும் பெண் நாயல்ல "தாய்" என்று போற்றுவதற்குரிய தெய்வப்பிறப்பு என்று போற்றிப்பாடுகிறார். தாயே இவ்வுலகில் அன்பைப் பொழிபவள் அன்பின் மறுவடிவம் தாயாவாள். எனவே தான் பெண்ணைத் தாயாகப் போற்றுகிறார்.

## பெண்ணடிமை

இடைக்காலத்தில் பெண்கள், சமுதாயத்தில் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அவலநிலையிலிருந்தைக் கண்டு கொதித்தெழுந்த பாரதியார்,

"மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்"4

என்றும்,

"பெண்மை அடிமையுற்றால் மக்களெல்லாம்

அடிமையுறல் வியப்பொன்றாமோ"5

என்றும் பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். பாரதியின் வழிநின்று பாரதிதாசனும்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின்

மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே"6

என்று பெண்ணடிமையை எதிர்த்துத் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார். அடிமைப் பட்டுக் கிடக்கும் பெண்கள் சமுதாயம் விடுதலை அடைந்தால் மட்டுமே தாய்த்திருநாடு விடுதலையடையும் என்ற கருத்தில் திடமாக இருந்தவர் பாரதிதாசன். அதனால் தான் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வரையில் நம் நாட்டிற்கு விடுதலை கிடைக்காது என்று முழங்கினார்.

## பெண் கல்வி

இன்று ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் கல்வி கற்று சாதனை படைத்து வருகிறார்கள். ஆனால் இடைக்காலத்தில் "அடுப்பூதும் பெண்களுக்குப் பிடிப்பெதற்கு?" என்று கூறி பெண்கல்வியை மறுத்தனர். பெண்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. பெண் தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கும், குழந்தைகளை மாண்புடன் வளர்ப்பதற்கும் குடும்பத்தைச் சீராக நடத்துவதற்கும் கல்வியானது மிக மிக அவசியமானதாகும்.

"உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்

களரனையர் கல்லா தவர்"7

என்ற குறளில் வள்ளுவர் கல்லாதவர் பெயரளவுக்கு உயிர் வாழ்பவரேயன்றி, உண்மையில் ஒரு பயனும் பயக்காத உப்பு நிலத்துக்கு ஒப்பாவர் என்று கூறி கல்லாதவரின் இழிநிலையை எடுத்தியம்புகிறார். பாரதிதாசனோ கல்லாத பெண்களைக் களர்நிலம் என்கிறார்.

“கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் - அந்நிலத்தில்

புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை”8

என்கிறார். ஒரு பெண் பெறுகின்ற கல்வியானது அவளை மட்டுமல்ல, அவளது குடும்பத்தையும் அறிவுடைய குடும்பமாக மாற்றி வளமோடு வாழ வழிகாட்டும். அதனால் தான் பாரதிதாசன்,

“மலைவாழை அல்லவோ கல்வி வாயார

உண்ணுவாய் போய் என் புதல்வி

விலைபோட்டு வாங்கவா முடியும் கல்வி

வேளைதோறும் கற்று வருவதால் படியும்

படியாத பெண்ணாய் இருந்தால் கேலி

பண்ணுவார் இவ்வூரார் தெரிந்தால்”9

என்று பெண்கல்வியின் அவசியத்தைக் கூறி பெண்குழந்தையைக் கல்வி பயிலத் தூண்டுகிறார்.

## இல்லறம் பேணும் பெண்ணிற்கு அறிவுரை

ஆணையும், பெண்ணையும் இணைத்து புதிய பந்தத்தை உருவாக்க சமுதாயம் நடத்துகின்ற ஓர் அற்புத விழாவே திருமணம் ஆகும். திருமண பந்தம் இனிமையுடன் நீடிக்க இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, அடுத்தவர் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து வாழும் போது இல்லறம் என்னும் நல்லறம் இன்பமாகும். பாரதிதாசன்,

“ஆண் பெண் என்ற இரண்டுருளை யால்நடக்கும் இன்பவாழ்க்கை”10

என்று கூறி, இன்பவாழ்விற்கு பெண்ணின் சிறப்பான வாழ்வும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். “மனைவி ஒரு மந்திரி அவள் தானே ராஜதந்திரி” என்பதற்கேற்ப பெண்ணானவள் கணவனது வெற்றிக்குப் பக்கபலமாக இருந்து துணைநிற்க வேண்டும், அவனது நடத்தை தவறும் போது திருத்த வேண்டும் என்பதை,

“உவந்தொழுவன் வாழ்க்கை சரி யாய்நடத்த

உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்!

அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்!

அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்!”11

என்ற பாடல் வரிகள் மூலம் உணர்த்துகிறார்.

இல்லறம் பேணும் பெண்கள் கணவனது வருவாய் அறிந்து செலவு செய்ய வேண்டும். வரவுக்குள் செலவு செய்து வளமோடு வாழ வேண்டும்.

“ஆகாறு அளவுஇட்டி தாயினுங் கேடில்லை

போகாறு அகலாக் கடை”12

என்பர் வள்ளுவர். பாரதிதாசனும்,

“வாழ்க்கைத் துணைவி

மனைக்குரிய மாண்பு கொண்டு

வாழ்வில் அவனின்

வருவாய் அறிந்து

செலவு செய்ய வேண்டும்"13

என்று இல்லறம் இனிதாக துன்பமின்றி அமைய பெண்கள் வரவுக்கு தகுந்த செலவு செய்து வாழ வேண்டுமென வலியுறுத்துகிறார்.

## கைம்பெண் மணம்

சமுதாயத்தில் ஒரு ஆணானவன் மனைவி இறந்தால் மறுநொடியே புதுமாப்பிள்ளை ஆகிவிடுகிறான். அவனது மறுமணத்தை ஆதரிக்கும் சமுதாயம் பெண்ணுக்கு மட்டும் மறுப்பு தெரிவிப்பதோடும், இழித்தும், பழித்தும் பேசுகின்றது. பெண்ணின் மனவுணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை. அதனை,

"மாண்டவன் மாண்ட பின்னர் - அவனின்

மனைவியின் உளத்தை

ஆண்டையார் காண்பதில்லை - ஐயகோ

அடிமைப் பெண்கதியே!"14

என்று கூறி வருந்துகிறார் பாரதிதாசன். கணவனை இழந்த பெண்களுக்குச் சமுதாயம் பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. அவர்களின் உணர்வுகள் அவமதிக்கப்படுகின்றன. இக்கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த பாரதிதாசன்,

"ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்

அடைகின்ற காதலுக்கும், மாற்றமுண்டோ?

பேடகன்ற அன்றிலைப்போல், மனைவிசெத்தால்

பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட்கிறான்!

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால்பின் மணத்தல்தீதோ?

பாடாத்தேனீக்கள் உலவாத்தென்றல்

பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"15

என்று சமுதாயத்தைப் பார்த்து கேள்விக்கணை தொடுக்கிறார். பாவேந்தர் பாரதிதாசன் முற்போக்கு சிந்தனையுள்ளவராக கைம்பெண் மணத்தை ஆதரித்தும், அதனை மறுக்கும் சமுதாயத்தை நோக்கிச் சாடியும் தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

பாவேந்தர் பாரதிதாசன் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிராகக் காணப்பட்ட பல பழக்கவழக்கங்களை எதிர்த்துச் சாடினார். சமுதாயம் பெண்ணடிமைத்தனத்தை நீக்கி பெருவாழ்வு வாழவேண்டுமென விரும்பினார். அதனால்தான் தனது பாடல்களில் பெண்ணால் இவ்வுலகம் நலமெய்தும் என்றும், பெண்ணடிமை தீர்வதே விடுதலைக்கு வழியாகும் என்றும், பெண் கல்வி அவசியமானது என்பதையும், குடும்ப வாழ்வில் பெண் எவ்வாறு வாழவேண்டுமென்றும், கைம்பெண் மணம் ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார். பெண்கள் குறித்த பாவேந்தரின் இச்சிந்தனைகள் சமுதாயத்திற்கு நல்வழிகாட்டுவதாக அமையும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறியலாம்.

## References

**இராமலிங்கம்.த, (2012) தமிழ்ச்சுவையும் அருட்சுவையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை**

**கண்ணப்பன்.கு, (2006) பாரதியும் பெண்ணியமும், ஜெயமணி வெளியீடுகள், சென்னை**

**திருவள்ளுவர், திருக்குறள், கழக வெளியீடு**

**பாரதிதாசன், (2013) பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள், மெர்குரிசன் பப்ளிகேஷன்ஸ், சென்னை**

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License